# விலைமனு கோரல்
# விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
# இலங்கை நில அளவைத் திணைக்களம்
# தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவன வளாகத்தின் பராமரிப்புச் சேவைக்கான விலை மனு கோரல் – 2026
# விலை மனு இலக்கம் – SD/I/2026

1. இலங்கை நில அளவைத் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளரினால் 2026/27 ஆம் ஆண்டிற்கு ஓராண்டு காலத்திற்கு தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவன வளாகத்தின் பராமரிப்புச் சேவைகளை முன்னெடுப்பதற்கு நிறுவனம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கான விலை மனுக்களைக் கோருவதற்கு தகுதி வாய்ந்த மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலை மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவன வளாகத்தின் பராமரிப்புச் சேவைகளை (2026/ 2027 ஆம் ஆண்டிற்கு ஓராண்டு காலத்திற்கு) |
|---|---|
| **மதிப்பிடப்பட்ட பெறுமதி பெறுமதி சேர் வரியுடன் (VAT) (ரூ)** | 20,079,722.52 |
| **விலை மனு காப்பீடு (ரூ.)** | 300,000.00 |
| **விலை மனு காப்பீடு செல்லுபடியாகும் காலம்** | 2026-08-04 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |
| **மீள செலுத்தப்படாத விலை மனுப் பத்திரக் கட்டணம் (ரூ.)** | 6,000.00 |
| **விலை மனு கோரும் ஆவணத் தொகுதி மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவற்றைப் பரிசீலிப்பதற்கும் பெற்றுக் கொள்வதற்கும்.** | 2026-03-27 ஆம் திகதி தொடக்கம் 2026-04-20 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை நில அளவையாளர் நாயகத்தின் திணைக்களத்திலும், மற்றும் தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தில் |
| **முன் விலை மனு ஒன்றுகூடல்** | 2026-04-07 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் |
| **விலை மனு வைப்புச் செய்தலை முடித்தல்** | 2026-04-21 மு.ப. 10. 30 மணிக்கு |
| **விலை மனுக்களைத் திறத்தல்** | 2026-04-21 மு.ப. 10. 35 இற்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் |
| **விலை மனு செல்லுபடியாகும் காலம்** | 2026-07-07 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |

2. விலை மனு கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.

3. ஆர்வம் காட்டுகின்ற தகுதி வாய்ந்த விலை மனுதாரர்களுக்கு இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்) : 0112 - 368106 அவர்களிடமும், தியத்தலாவ அளவையியலும் படமாக்கலும் நிறுவனத்தின் நில அளவை அத்தியட்சகர் (வள முகாமைத்துவம்) : 057 - 2229015 அவர்களிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

4. தகைமைகள், தேவைப்பாடுகள் மற்றும் மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதுடன், சகல வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

5. விலை மனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தாபால் மூலம் அனுப்புவதற்கோ அல்லது கொண்டு வந்து ஒப்படைப்பதற்கோ ஆவன செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரிக்கு பிரத்தியேகமாக வருகை தந்து கலந்து கொள்கின்ற விலை மனுதாரர்கள்/ பிரதிநிதிகள் முன்னிலையில் விலை மனுக்கள் திறக்கப்படும். சகல விலை மனுக்களுடனும் விலை மனு காப்பீடும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட முகவரி :** சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்), நில அளவையாளர் நாயகத்தின் திணைக்களம், இலக்கம் 150, கிருல வீதி, கொழும்பு 05. | தொலைபேசி / தொலைநகல் – 0112 368106 | snrsspns@survey.gov.lk

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு சார்பாக,
இலங்கை நில அளவைத் திணைக்களம்.
2026-03-27